முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்கரன்கோவில்,

**முன்னிலை : திருமதி.M.அலிமா, B.A.,L.L.M.,**

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

2026 ஆம் ஆண்டு ஜீன் மாதம் 10 ஆம் நாள் புதன்கிழமை

**இடைநிலை மனு எண்.08/2026**

**IN**

**அசல் வழக்கு எண்.163/2015**

1. மாரியம்மாள்
2. காளிராஜ் ... மனுதாரர்கள்/வாதிகள்

/எதிர்/

1. அருணாசலம்
2. ராஜேஸ்வரி
3. ரெங்கசாமி ....எதிர்மனுதார்கள்/பிரதிவாதிகள்

இம்மனுவானது 18.03.2026 தேதியன்று இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.ஆனந்த் அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர் அசல் வழக்கில் தோன்றாத் தரப்பினராக தீர்மானிக்கப்பட்டுள்ள நிலையில், இம்மனுவை பொறுத்தும் தோன்றாத்தரப்பினராக கருதப்பட்டும், 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.N.சங்கரநாராயணன் அவர்கள் ஆஜராகியும் may be called என மேற்குறிப்பு செய்துள்ள நிலையில் 2ம் எதிர்மனுதாரர் அழைத்தும் ஆஜராகாததால் இந்நீதிமன்றத்தால் 18.02.2026 அன்று ஒருதலைபட்சமாக்கப்பட்டும், 3ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.சுரேஷ்குமார் அவர்கள் ஆஜராகியும், மனு, 3ம் எதிர்மனுதாரர் தரப்பு எதிருரை மற்றும் அசல் வழக்கு கோப்பினை பரிசீலனை செய்தும், இருதரப்பு வாத உரையை கேட்டறிந்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையின் கீழ் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**உத்தரவு**

இம்மனுவானது, மனுதாரர்கள் தரப்பில் உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 6, விதி 17, 18 மற்றும் பிரிவு 151ன்படி, இந்த மனுவில் கூறியவாறு விளம்புகையுடன் சுவாதீன ஒப்படைப்பு பரிகாரத்தை வழக்குரையில் சேர்த்து

ALIMA M Digitally signed by ALIMA M Date: 2026.06.10 18:35:41 +0530

சீர்திருத்த மனுவில் கண்டவாறு வழக்குரையை சீர்திருத்தம் செய்து கொள்ள அனுமதியளித்து உத்தரவிடக்கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1) <u>மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்</u> :–

மனுதாரர்கள் அசல் வழக்கில் வாதிகள் என்றும், மனுதாரர்கள் எதிர்மனுதாரர்கள் மீது விளம்புகை பரிகாரம்கோரி அசல் வழக்கினை தாக்கல் செய்திருந்ததாகவும், பிராது தபசில் சொத்து நீதிமன்றத்தால் சுவாதீனம் ஒப்படைக்கப்பட்டு உள்ளது என்றும், இந்த பிராதில் விளம்புகையுடன் ஒப்படைப்பு பரிகாரம் கேட்காமல் விடுபட்டுள்ளது என்றும், அது வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல தெய்வாதீனமானதாகும் என்றும், இவ்வழக்கு பிராதில் "அ" பரிகாரத்திற்கு தொடர் பரிகாரமாக சுவாதீன ஒப்படைப்பு கேட்டு I.A.No.5/2025 என தாக்கல் செய்திருந்தனர் என்றும், அம்மனு 19.01.2026 ல் "Not pressing this petition without prejudice to file a new petition" என தனது வழக்கறிஞர் மேலெழுத்துச் செய்ததன் அடிப்படையில் "The petition is dismissed as not pressed without cost" என உத்தரவிடப்பட்டு தள்ளுபடி செய்யப்பட்டது என்றும், மனுதாரர்கள் நீதிமன்றத்தின் பொன்னான நேரத்தை விரயம் செய்யும் நோக்குடனோ, வழக்கு விசாரணையினை காலதாமதம் செய்யும் நோக்குடனோ அவ்வாறு செய்யவில்லை என்றும், மனுதாரர்கள் தரப்பில் நல்ல வழக்கு உள்ளதாக மூத்த வழக்கறிஞரின் சட்ட ஆலோசனை கிடைத்துள்ளது என்றும், மேற்படி அசல் வழக்கில் இத்துடன் செய்துள்ள மனுவில் கண்ட சீர்திருத்த விபரப்படிக்கு சீர்திருத்தம் செய்யவேண்டியது அவசியமாயுள்ளது என்றும், இவ்வழக்கு பிராதை மனுவில் கண்ட சீர்திருத்த விபரப்படிக்கு சீர்திருத்தம் செய்வதால் பிராதின் தன்மை எவ்விதத்திலும் மாறக்கூடியதில்லை என்றும், தொடர்ந்து, இந்த வழக்கு விசாரணையை எந்தவித காலதாமதமும் இல்லாமல் மேல்நடத்திப்போக தயாராக உள்ளதாகவும், இதனால், இந்த எதிர்மனுதாரர்களுக்கு யாதொரு கஷ்ட நஷ்டமும் ஏற்படப்போவதில்லை என்றும், ஆகையால், இந்த மனுவில் கூறியவாறு விளம்புகையுடன் சுவாதீன ஒப்படைப்பு பரிகாரத்தை வழக்குரையில் சேர்த்து சீர்திருத்த மனுவில் கண்டவாறு வழக்குரையை சீர்திருத்தம் செய்து கொள்ள அனுமதியளித்து உத்தரவிடக்கோரி இம்மனு மனுதாரர்கள் தரப்பில் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.06.10 18:35:49 +0530

2) **<u>3ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்</u> :–**

மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள இம்மனு சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்றும், பிராது சொத்து E.P.No.13/2004 in O.S.No.26/2001 ன்படி சங்கரன்கோவில் சார்பு நீதிமன்றத்திலிருந்து ஏலம் விடப்பட்டு அதனை எதிர்மனுதாரர் ஏலம் எடுத்து கடந்த 23.01.2012 தேதியில் எதிர்மனுதாரர் மேற்படி மாண்புமிகு சார்பு நீதிமன்றத்திலிருந்து ஏலச் சான்றிதல் பெற்று கடந்த 15.03.2013 சுவாதீன ஒப்படைவும் பெற்று எதிர்மனுதாரர் தனது தனித்த சொத்தாக அனுபவம் செய்து வருகிறார் என்றும், ஆனால், மனுதாரர்கள் இவ்வழக்கிற்கான சங்கதிகளாக பிராதில் 6 வது பாராவில் பிராது சொத்தை வாதிகள் அனுபவம் செய்து வருவதாகவும், பிராது சொத்தினை 3 ம் எதிர்மனுதாரர் சங்கரன்கோவில் சார்பு நீதிமன்றம் மூலம் ஒப்படைவு எதுவும் பெறவில்லை என வழக்குமூலம் குறிப்பிட்டு வழக்கு செய்துள்ளார்கள் என்றும், ஆனால், இந்த மனுதாரர் தாக்கல் செய்துள்ள இம்மனுக்கான உறுதிக்கூற்றில் பிராது தபசில் சொத்து நீதிமன்றத்தால் சுவாதீனம் ஒப்படைப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது என ஒப்புக்கொண்டுள்ளார் என்றும், பிராது சொத்து 3 ம் எதிர்மனுதாரர் அனுபவத்திலே கடந்த 15.03.2013 தேதி முதல் நாளது தேதி வரை அதாவது கடந்த 12 ஆண்டுகளுக்கு மேலாக அதாவது தொடர்ந்து இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பும் இவ்வழக்கு காலத்திலும் மனுதாரருக்கு தெரிய இந்த எதிர்மனுதாரரின் அனுபவத்தில் இருந்து வருகிறது என்பதும் நன்கு துலங்கும் நிலையில், மனுதாரர் பிராது தபசில் சொத்தினை இந்த எதிர்மனுதாரர் மனுதாரரிடம் ஒப்படைவு செய்ய வேண்டுமென சுவாதீன பரிகாரம் கோர இந்த மனுதாரர் சட்டப்படி முரண்தடைபட்டுள்ளார் என்பதுடன் இவ்வழக்கும் அற்றுபோய்விட்டது என்றும், அதனால் இம்மனு சட்டப்படி ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல என்றும், இவ்வழக்கின் பிராதை மனுதாரர்கள் கோரியுள்ளது போல் சீர்திருத்தம் செய்யும்பட்சத்தில் இவ்வழக்கிற்கான வழக்கு மூலம் மற்றும் அதன் தன்மை ஆகியவைகள் மாறக்கூடியதாகும் என்றும், அதனால் இந்த எதிர்மனுதாரர் மிகுந்த கஷ்ட நஷ்டங்களுக்கு உள்ளாவார் என்றும், அதேபோல் மனுதாரர் I.A.No.5/2025 என இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள மனுவை திரும்ப பெற்றுவிட்டு, மீண்டும் தாக்கல் செய்துள்ள

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2026.06.10 18:35:56 +0530

இம்மனு இவ்வழக்கினை காலதாமதப்படுத்த வேண்டுமென்று தாக்கல் செய்யப்பட்டுள்ள ஒன்றாகும் என்றும், அதேபோல் இந்நீதிமன்றம் I.A.No.5/2025 என்ற மனுவை தள்ளுபடி செய்து பிறப்பித்துள்ள உத்தரவில் மீண்டும் புதிய மனு தாக்கல் செய்ய எவ்வித அனுமதியும் வழங்கப்படவில்லை என்றும், அதனால் மனுதாரர் தாக்கல் செய்துள்ள இம்மனு சட்டப்படி ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல என்றும், அதேபோல் இந்த மனுதாரர்களால் இவ்வழக்கிற்கு மனுதாரர் கூறியுள்ள வழக்குமூலம் மற்றும் இம்மனுவிற்கான மனு மூலமும் தவறானது என துலங்குவதுடன் மனுதாரர்கள் 3ம் எதிர்மனுதாரருக்கு எதிராக அசல் வழக்கில் கோரியுள்ள பரிகாரமும் அற்றுபோய்விட்டது என்றும், எனவே, மனுதாரர்களின் மனு சட்டப்படி தள்ளுபடி செய்யப்படவேண்டும் என எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) **<u>தீர்வுக்குரிய பிரச்சனை:-</u>**

இம்மனுவானது அனுமதிக்கப்படத்தக்கதா? என்பதேயாகும்.

4) மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனு, 3ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரை, மேற்படி எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எ.ம.சா.ஆ.1 முதல் எ.ம.சா.ஆ.8 வரையிலான ஆவணங்கள், அசல் வழக்கு கோப்பு மற்றும் இருதரப்பு வாதஉரை ஆகியவைகள் பரிசீலனை செய்யப்பட்டன.

5) மனுதாரர்களால் இம்மனுவானது கீழ்க்கண்ட பரிகாரத்தை வழக்குரை பரிகாரத்துடன் சேர்த்து அசல் வழக்கை சீர்திருத்தம் செய்து கொள்ள அனுமதியளித்து உத்தரவிடக்கோரி இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

> “.....12(அ) பிராது தபசில் சொத்தை பொறுத்து இ.பி.எண்.13/2004 ல் 14.11.2011 அன்று சங்கரன்கோவில் சார்பு நீதிமன்றம் விட்ட ஏலமானது சட்டப்படிக்கு செல்லக்கூடியதில்லை என்றும், அது வாதிகளை கட்டுப்படுத்தக்கூடியதில்லை என விளம்புகை செய்தும், அதன் தொடர்ச்சியாக பிராது தபசில் சொத்தை நீதிமன்றம் குறிப்பிடும் ஓர் தினத்திற்குள் வாதிகள் வசம் 3ம் பிரதிவாதி ஒப்படைக்க

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2026.06.10 18:36:06 +0530

வேண்டுமென்றும் தவறினால் இந்நீதிமன்றம் வாதிகள் வசம் பிராது தபசில் சொத்தை ஒப்படைத்து உத்தரவு பிறப்பிக்க வேண்டியும்......"

6) அசல் வழக்கு கோப்பினை பரிசீலிக்கும்போது, அசல் வழக்கானது தாவா சொத்தை E.P.No.13/2004 in O.S.No.26/2001 ல் 14.11.2011 அன்று சங்கரன்கோவில் சார்பு நீதிமன்றம் விட்ட ஏலமானது சட்டப்படி செல்லக்கூடியதில்லை என்றும், அது வாதிகளை கட்டுப்படுத்தக்கூடியதில்லை என விளம்புகை செய்தும், E.P.No.13/2004 ல் 23.01.2012 அன்று சங்கரன்கோவில் சார்பு நீதிமன்றம் 3 ம் பிரதிவாதிக்கு கொடுத்த ஏலச்சான்றிதழ் சட்டப்படி செல்லக்கூடியதில்லை என்றும், அது வாதிகளை கட்டுப்படுத்தக்கூடியதில்லை என்றும் விளம்புகை பரிகாரம் கோரி இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

7) மேலும், இந்நிலையில், மனுதாரர்கள்/வாதிகளின் அசல் வழக்கின் வழக்குரையின் பத்தி 8—னை பார்வையிடும்போது, அதில்,

"......3 ம் பிரதிவாதி அவ்விதம் ஒப்படைப்பு (Actual delivery) எதுவும் பெறவில்லை. தாவா சொத்தை வாதிகள் கூட்டுறவு பண்டகசாலைக்கு வாடகைக்கு விட்டிருந்தனர். நீதிமன்ற அமீனா 3 ம் பிரதிவாதிக்கு தாவா சொத்தை ஒப்படைப்பு செய்து கொடுக்க செய்ய சென்றுள்ளதாக கூறப்படும் செயலானது சட்டவிரோதமானது. 3 ம் பிரதிவாதியால் கோரப்படும் ஒப்படைப்பு நேரத்தில் திருவேங்கடம் கூட்டுறவு பண்டகசாலை வாதிகளிடம் சட்டபூர்வமான வாடகைதாரராக இருந்தது. வாடகைதாரர் சொத்திலிருக்கும்போது அமீனா Actual delivery கொடுத்ததாக பதிவு செய்திருப்பது ஆர்டர் 21 ரூல் 36 க்கும் மற்றும் தமிழ்நாடு கட்டிடங்கள் குத்தகை மற்றும் வாடகை கட்டுப்பாட்டு சட்டம் பிரிவு 10(1)க்கு விரோதமானதாகும். ஆகவே 3 ம் பிரதிவாதியால் சொல்லப்படும் ஒப்படைப்பும் சட்டப்படி செல்லக்கூடியதில்லை. அது வாதிகளை கட்டுப்படுத்தாது. வாதிகள் தான் தாவா சொத்தை அனுபவம் செய்து வருகிறார்கள்......"

8) இதிலிருந்து, பிராது சொத்து வாதிகளின் சுவாதீனத்திலும் அனுபவத்திலும் இருப்பதாகக் கூறி வாதிகள் அசல் வழக்கினை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பதை இந்நீதிமன்றத்தால் அறியமுடிகிறது.

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.06.10 18:36:15 +0530

9) ஆனால், மனுதாரர்கள்/வாதிகள் இம்மனுவிற்கான உறுதிக்கூற்றில், பிராது தபசில் சொத்து நீதிமன்றத்தின் மூலம் ஒப்படைவு செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளனர். இதிலிருந்து, அசல் வழக்குரையில் கூறப்பட்டுள்ள சங்கதிகளுக்கும், தற்போதைய சீர்திருத்த மனுவில் கூறப்பட்டுள்ள சங்கதிகளுக்கும் வெளிப்படையான முரண்பாடு இருப்பதை இந்நீதிமன்றத்தால் அறியமுடிகிறது.

10) மேலும், வழக்கு கோப்பின் பரிசீலனையில் இருந்து, 3-ம் எதிர்மனுதாரர்/3 வது பிரதிவாதி தரப்பில் வழக்குரையை நிராகரிக்கக்கோரி தாக்கல் செய்யப்பட்ட I.A.No.1516/2015 ல் E.P.No.13/2004 in O.S.No.26/2001-ல் நடைபெற்ற நீதிமன்ற ஏலத்தின் மூலம் 3-ம் எதிர்மனுதாரர்/3 வது பிரதிவாதி சொத்தைப் பெற்று, நீதிமன்றத்தின் மூலம் சுவாதீன ஒப்படைப்பு பெற்று தொடர்ந்து அனுபவித்து வருவதாக கட்சி எடுக்கப்பட்டிருப்பதை இந்நீதிமன்றத்தால் அறியமுடிகிறது.

11) மனுதாரர்களுக்கு E.P.No.13/2004-ல் நீதிமன்றத்தின் மூலம் 3 வது எதிர்மனுதாரருக்கு சுவாதீன ஒப்படைப்பு வழங்கப்பட்டுள்ள விபரம் முன்னரே தெரிந்திருந்தும், அசல் வழக்குரையில் அதனை மறுத்து கூறிவிட்டு தற்போது அதற்கு முரணான நிலைப்பாட்டை (inconsistent pleadings) எடுத்து சுவாதீன ஒப்படைப்பு பரிகாரத்தை சேர்க்க முற்படுவது சட்டப்படி சரியானது அல்ல.

12) Order VI Rule 17 உரிமையியல் நடைமுறை சட்டத்தின் நோக்கம், உண்மையான பிரச்சனையை தீர்க்க தேவையான சீர்திருத்தங்களை அனுமதிப்பதே அன்றி, வழக்கின் அடிப்படை சங்கதிகளை மாற்றுவதற்கோ அல்லது புதிய வழக்குமூலத்தை அறிமுகப்படுத்துவதற்கோ அல்ல என்பது நிலைநிறுத்தப்பட்ட சட்டவிதி ஆகும்.

13) மேலும், அசல் வழக்கில் வாதிகள் தாங்களே சுவாதீனத்தில் இருப்பதாக கூறி விளம்புகை பரிகாரம் மட்டும் கோரிய நிலையில், தற்போது 3 வது எதிர்மனுதாரரிடமிருந்து சுவாதீன ஒப்படைப்பு கோருவது முற்றிலும் வேறுபட்ட மற்றும் முரண்பட்ட வழக்குமூலத்தை அறிமுகப்படுத்துவதாகும்.

14) மேலும், மனுதாரர்கள் சுவாதீன ஒப்படைப்பு வழங்கப்பட்டதாக தாமே ஒப்புக்கொண்டுள்ள நிலையில், 3 வது எதிர்மனுதாரர் மாண்புமிகு சார்பு

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.06.10 18:36:23 +0530

நீதிமன்றத்திலிருந்து ஏலச் சான்றிதல் பெற்று, கடந்த 15.03.2013 அன்று மேற்படி நீதிமன்றம் மூலமாக சுவாதீன ஒப்படைவும் பெற்று சுமார் 12 ஆண்டுகளுக்கும் மேலான கால தாமதத்திற்குப் பிறகு சுவாதீன பரிகாரத்தை வழக்குரையில் சேர்க்க கோருவது Due Diligence என்ற அடிப்படை நிபந்தனைக்கு முரணானதாகும். இந்நிலையில், மனுதாரர்கள் நீண்ட காலம் செயலற்றிருந்ததன் விளைவாக 3-ம் எதிர்மனுதாரருக்கு ஏற்பட்டுள்ள உரிமை நிலைகள் (Accrued Rights) பாதிக்கப்படும் நிலை உருவாகும்.

15) மேலும், இந்நிலையில் இந்நீதிமன்றமானது நமது மாண்புமிகு உச்சநீதிமன்றத்தால் Revajeetu Builders & Developers v. Narayanaswamy & Sons, (2009) 10 SCC 84, என்ற வழக்கில் வழங்கப்பட்ட உத்தரவில் கீழ்க்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

> "Factors to be taken into consideration while dealing with applications for amendments
>
> 67. On critically analysing both the English and Indian cases, some basic principles emerge which ought to be taken into consideration while allowing or rejecting the application for amendment:
>
> (1) whether the amendment sought is imperative for proper and effective adjudication of the case;
>
> (2) whether the application for amendment is bona fide or mala fide;
>
> (3) the amendment should not cause such prejudice to the other side which cannot be compensated adequately in terms of money;
>
> (4) refusing amendment would in fact lead to injustice or lead to multiple litigation;
>
> (5) whether the proposed amendment constitutionally or fundamentally changes the nature and character of the case; and (6) as a general rule, the court should decline amendments if a fresh suit on the amended claims would be barred by limitation on the date of application."

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.06.10 18:36:31 +0530

16) மேற்கண்ட முன்தீர்ப்பில் வகுக்கப்பட்டுள்ள சட்டக் கோட்பாடுகளின்படி, மனுதாரர்களால் இம்மனுவில் கேட்கப்பட்டுள்ள தற்போதைய சீர்திருத்தம் வழக்கின் அடிப்படை தன்மையை மாற்றக்கூடியதாகவும், மிகுந்த காலதாமதத்திற்குப் பிறகு கோரப்பட்டதாகவும், எதிர்மனுதாரருக்கு ஏற்பட்டுள்ள உரிமைகளை பாதிக்கக்கூடியதாகவும் இருப்பதால், மனுதாரர்களின் மனுவானது அனுமதிக்கப்படத்தக்கது அல்ல என்பதை இந்நீதிமன்றத்தால் அறியமுடிகிறது.

17) எனவே, மேற்கண்ட காரணங்களின் அடிப்படையில், மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனு அனுமதிக்கப்படத்தக்கது அல்ல என இம்மனுவிற்கு இந்நீதிமன்றத்தால் முடிவு காணப்படுகிறது.

**18) இறுதியாக,**

இம்மனுவானது தள்ளுபடி செய்யப்பட்டு உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026 ஆம் ஆண்டு ஜீன் மாதம் 10ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2026.06.10 18:36:39 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

**1. மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் :–** இல்லை

**2. 3ம் எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் :–** இல்லை

**3. 3ம் எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் :–**

| ஆவண எண். | நாள் | சான்றாவணங்கள் |
|---|---|---|
| எ.ம.சா.ஆ.1 | -- | இவ்வழக்கு மனுதாரர்கள்/வாதிகள் சங்கரன்கோவில் சார்பு நீதிமன்றத்தில் E.A.No.98/2008 in E.P.No.13/2004 in O.S.No.26/2001 என பிராது தபசில் |

| | | |
|---|---|---|
| | | சொத்தை பொறுத்து ஏல நடவடிக்கையை தடை செய்யக்கோரி தாக்கல் செய்துள்ள மனு மற்றும் உத்தரவு – நீதிமன்ற சான்றிட்ட நகல் |
| எ.ம.சா.ஆ.2 | -- | இவ்வழக்கு மனுதாரர்கள்/வாதிகள் சங்கரன்கோவில் சார்பு நீதிமன்றத்தில் E.A.No.97/2008 in E.P.No.13/2004 in O.S.No.26/2001 என பிராது தபசில் சொத்தை பொறுத்து மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள தகதா மனு மற்றும் உத்தரவு – நீதிமன்ற சான்றிட்ட நகல் |
| எ.ம.சா.ஆ.3 | 23.01.2012 | 3 ம் எதிர்மனுதாரர் சங்கரன்கோவில் சார்பு நீதிமன்றத்தில் O.S.No.26/2001 ல் பெற்ற ஏலச்சான்று – அசல் |
| எ.ம.சா.ஆ.4 | -- | O.S.No.26/2001 ல் அமீனா வாரண்ட் மற்றும் ரிட்டன் – நீதிமன்ற சான்றிட்ட நகல் |
| எ.ம.சா.ஆ.5 | -- | அமீனா அத்தாட்சி –நீதிமன்ற சான்றிட்ட நகல் |
| எ.ம.சா.ஆ.6 | -- | மின் கட்டணம் ரசீதுகள் (எண்ணம்.3) – அசல் |
| எ.ம.சா.ஆ.7 | -- | 3 ம் எதிர்மனுதாரர் பெயரில் உள்ள சொத்துவரி ரசீது (எண்ணம்.10) – அசல் |
| எ.ம.சா.ஆ.8 | 14.08.2023 | 3 ம் எதிர்மனுதாரர் தாவா சொத்தை பொறுத்து மதுரை உயர்நீதிமன்றத்தில் WP.MD.No.7273/2022 ல் 14.08.2023 தேதி பெற்றுள்ள உத்தரவு – கணினி நகல் |

**4. இதர எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் :–**

இல்லை

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2026.06.10 18:36:52 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

**மு.மா.உ. நீதிமன்றம்,**
**சங்கரன்கோவில்,**

I.A.No.08/2026
in
O.S.No.163/2015
**உத்தரவு (Draft / Fair)**
**நாள் : 10.06.2026**